

# விவசாய விஞ்ஞானம்

# 3.0 - கடந்த கால பல்தேர்வு வினாக்கள்



தரம்: 12,13

# கடந்த கால பல்தேர்வு வினாக்கள்

குறித்த மண் மாதிரி ஒன்றின் திண்மக்கூறுகளின் திணிவு Wg ஆக இருக்கும் போது அக்கூற்றின் கனவளவு V $cm^3$ ஆகக் காணப்பட்டது. முன் மாதிரியின் மொத்தக்கனவளவு a $cm^3$ ஆயின் உண்மையடர்த்திக்கும் தோற்றடர்திக்குமான வேறுபாடு?

1. $W\frac{(a-v)}{v}$
2. $\frac{(a-v)}{av}$
3. $W\frac{(a-v)}{av}$
4. $W\frac{(av)}{av}$
5. $\frac{W(av)}{av}$

மண்ணங்கிகள் தொடர்பான கூற்றுக்கள் பின்வருமாறு

**A.** தாவரங்களின் வேரத்தொகுதியை நோய்களில் இருந்து பாதுகாத்தல்

**B.** சேதனப்பொருட்களினை எளிய நிலையில் இருந்து சிக்கலான நிலைக்கு மாற்றுதல்

**C.** மண்ணங்கிகள் மூலகங்களின் சுழற்சிச் செயன்முறையில் பங்களிப்பு செய்கின்றன.

1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. C மாத்திரம் 4. A,B மாத்திரம்
5.B,C மாத்திரம்

துணைக்கனியங்கள் பற்றிய கூற்றுகளில் சரியானது?

1. திரவப்பாறைக்குழம்பு (மக்மா) குளிர்ந்தது திண்மமாகி உருவாகும் பாறை வானிலையால் அழிந்து மண்ணில் சேரும் கனியங்கள்.
2. மண்ணில் உள்ள மணலில் அதிகமாக அடங்குவது துணைக்கனியங்களாகும்.
3. இதில் குவாட்ஸ், பொஸ்பார் என்பன அடங்கும்.
4. கரைசலொன்றிலுள்ள சேர்வைகள் படிவுறுவதால் உருவாகும் கனியங்கள்
5. இலைற்று துணைக்கனிபொருளில் அடங்காதது

தொகுப்பு : திருமதி. N. வசந்தன், உதவிக் கல்விப் பணிப்பாளர் - தொழில்நுட்பம், (ZEO, - கிளிநொச்சி)
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் - த,தொ,தொ, (மு/ உடையார்கட்டு மகா வித்தியாலயம் )
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**பின்வரும் மண்ணின் நிறம் பற்றிய கூற்றுகளில் சரியானது?**

**A - மண்ணில் நிறத்தை தீர்மானிப்பதில் நிறச்சாயல் (Hue) தூய்மை (Chroma) பெறுமானம் (Value) ஆகிய நியதிகள் பயன்படும்.**

**B - தாய்ப்பாறை.ப்பொருள், மண்பக்க தோற்றம் உருவாவதில் பங்களிப்புச் செய்த காரணிகள் மண்நிறத்தில் செல்வாக்குச் செலுத்தும்**

**C - நீர்வடிப்பு, மண்வளியூட்டம் ஆகிய கருத்துக்களை பெறலாம்.**

**மேற்குறித்த கூற்றுகளுள் சரியானவை?**

1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. A,B மாத்திரம் 4. A,C மாத்திரம் 5.A,B,C ஆகிய மூன்றும்

**மண்ணின் தோற்ற அடர்த்தி பற்றிய கூற்றுகளில் தவறானது**

1. ஈர நிலையிலுள்ள மண்ணுக்கே தோற்ற அடர்த்தி கணிக்கப்படும்
2. மண்ணில் இயல்பான கட்டமைப்பு அவ்வாறே உள்ள நிலையில் காணப்படும் அடர்த்தியே அம்மண்ணில் தோற்ற அடர்த்தி எனப்படும்.
3. மண்ணில் அலகுக்கனவளவில் உள்ள திண்மக்கூறுகளில் திணிவே தோற்ற அடர்த்தி ஆகும்
4. மண்மாதிரியில் திண்ம திணிவை மொத்தக்கனவளவினால் வகுத்தால் கிடைக்கும் விகிதம்
5. தோற்ற அடர்த்தியின் அலகு $gcm^{-3}$

**மண் கட்டமைப்பு குழைய காரணமாக அமைவது மண்ணிலுள்ள?**

1. களித்தணிக்கைகள்
2. $Ca^{++}$ அயன்களாகும்
3. $Na^{+}$ அயன்களாகும்
4. உக்கல் துணிக்கைகளாகும்
5. இரும்பு ஒட்சைட்டாகும்

**மண்ணில் காணப்படும் அமிலக்கற்றயன்கள் யாவை?**

1. கல்சியமும் மக்னீசியமும்
2. கல்சியமும் ஐதரசனும்
3. அலுமினியமும் ஐதரசனும்
4. சோடியமும் பொட்டாசியமும்
5. பொட்டாசியமும் மக்னீசியமும்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**மண் அரிப்பின் போது மண் உடலில் இருந்து மண்துணிக்கைகளையும் திரள்களையும் அகற்றுவதில் அதிக அளவில் செல்வாக்கு செலுத்தும் காரணி?**

1. மண் மேற்பரப்பில் நீர் பாய்ந்து செல்லல்
2. விலங்குகளின் பல்வேறு செயன்முறைகள்
3. மண்ணைத் தயார் செய்யும் செயல்முறை
4. மண்ணைத் தினமும் உலரவிடுதல்
5. மழைவீழ்ச்சி

**மண்வகை ஒன்றின் சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளது.**

**A.** மண்கட்டமைப்பு

**B.** மண் அடர்த்தி

**C.** $P^H$ பெறுமானம்

**D.** அயன் பரிமாற்றக்கொள்ளளவு

**E.** மண் போசணை அளவு

**இவற்றில் மண்ணின் பௌதீக இயல்புகள்?**

1. A ,B 2. A,C 3. A,B,C 4. A,C,D 5.B,C,D,E

**மூலக்கற்றயன்களை 30 cmol/kg என்ற அளவில் கொண்டுள்ள குறிப்பிட்ட மண் ஒன்றின் உப்பு மூல நிரம்பல் சதவீதம் 60 வீதமாகும். இம் மண்ணின் அமிலக்காரணி கற்றை எண்களின் அளவு?**

1. 5 cmol/kg 2. 20 cmol/kg 3. 35 cmol/kg 4. 60 cmol/kg
5. 90 cmol/kg

**மண் தடை பின்வருவனவற்றால் குறைக்கப்படலாம்.**

**A.** மண்கட்டமைப்பையும் , காற்றோட்டத்தையும் முன்னேற்றுவதால்

**B.** மண்ணுக்கு சேதனப்பசளை சேர்ப்பதால்

**C.** பூச்சிய பண்படுத்தல் மேற்கொள்வதால்

**மேற்குறித்த கூற்றுகளுள் சரியானவை?**

1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. C மாத்திரம் 4. A,B மாத்திரம்
5.B,C மாத்திரம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி. N. வசந்தன், உதவிக் கல்விப் பணிப்பாளர் - தொழில்நுட்பம், (ZEO, - கிளிநொச்சி)
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் - த,தொ,தொ, (மு/ உடையார்கட்டு மகா வித்தியாலயம் )
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**பின்வரும் மண்கூறுடன் தொடர்பான சில கூற்றுகள் ஆகும்**

**A - கயோலின் களியின் கற்றயன் பரிமாற்றம் திறன் அதிகம்**

**B - கயோலின் களியின் கற்றயன் பரிமாற்றம் திறன மொன்ற்மோறி லோனைற்றுக்களி மண்ணைவிட அதிகம்**

**C - மொன்ற்மோறி லோனைற்றுக்களி 2:1 கட்டமைப்புடைய விரிவடையும் களியாகும்.**

**D - ஐதரசு ஒட்சைட்டுகள் களிக்கனிப் பொருட்களுக்குரியயவை.**

**மேற்குறித்த கூற்றுகளுள் சரியானவை?**

1. A .B மாத்திரம் 2. B,C மாத்திரம் 3. B,D மாத்திரம் 4. C,D மாத்திரம் 5. A,C மாத்திரம்

**மண்ணின் நீர்பற்றுவதற்கான ஆற்றல் தீர்மானிக்கப்படுவது?**

1. ஆவியாதல், ஆவியுயிர்ப்பு, பதங்கமாதல் என்பவற்றினால் ஆகும்.
2. ஊடுவடிதல்திறன், உண்மை அடர்த்தி , ஓடிவடியும் திறன்
3. நீர்ப்பாசனம் , ஊடுவடிதல் , உவராதல் என்பவற்றினால் ஆகும்.
4. மண்ணின் ஆழம், துணிக்கைப்பருமன், சேதனப்பொருள் உள்ளடக்கம் என்பவற்றால் ஆகும்.
5. ஊடுவடிதல் திறன் , நீர் கொள்திறன் , ஆவியாதலினால் நீர் இழப்பு என்பவற்றினாலாகும்.

**மண்ணில் சுயாதீனமாக வாழ்ந்து நைதரசனைப் பதிக்கும் காற்றுவாழ் பற்றீரியா?**

1. றைசோபியம்
2. அசற்றோபக்ரர்
3. குளொஸ்திரிடியம்
4. சயனோ பக்ரீரியா
5. நைற்றோ பக்ரர்

**குழாயிமுறையில் மண் இழையமைப்பை சோதிக்கும் பரிசோதனையின் போது ஐதரசன் பரவொட்சைட்டு சேர்க்கப்படுவதன் காரணம் யாது?**

1. மண்ணிலுள்ள கனியத்துணிக்கைகளை வேறாக்குதல்
2. மண்ணிலுள்ள தேனப்பதார்த்தங்களை அகற்றுதல்
3. மண்ணிலுள்ள நடைபெறும் இரசாயணத் தாக்கங்களை இலகுபடுத்தல்
4. மண் துணிக்கைகளுக்கிடையில் நுண்துளைத்தன்மையை ஏற்படுத்தல்
5. மண்ணைக் கரைத்தல்.

தொகுப்பு : திருமதி. N. வசந்தன், உதவிக் கல்விப் பணிப்பாளர் - தொழில்நுட்பம், (ZEO, - கிளிநொச்சி)

கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் - த,தொ,தொ, (மு/ உடையார்கட்டு மகா வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

மண்மாதிரியொன்றின் இயல்புகள் வருமாறு

- 20% இலும் அதிக குவாட்சைக் கொண்டது.
- கரட்டான் இழையமைப்பையும் அமிலத்தன்மையையும் கொண்டது.
- மஞ்சள் கபில நிறங் கொண்டது

இந்த மண் உருவாக ஏதுவான தாய்ப்பாறைப் பொருளாக அமையத்தக்கது?

1. கிரனைற்றும் நைசும் 2. டொரமைற்றும் சுண்ணாம்புக்கல்லும் 3. மணல்கல்லும் சேலும்
4. போசால்ற்றும் டொலமைட்டும் 5. மணல் போசால்ற்றும்

நிறையறிமுறையில் மண்ணீர் சதவீதத்தைத் துணியும் செயற்பாட்டின் போது பெறப்பட்ட தரவுகள் சில கீழே தரப்பட்டுள்ளன. குளத்தில் பெறப்பட்ட மண்மாதிரியின் திணிவு 75g $105^0$C வெப்பநிலையில் உலர்த்தப்பட்ட மண்மாதிரியின் திணிவு 60g அம் மண்மாதிரியின் நீர்ச்சதவீதம் எவ்வளவாகும்?

1. 15%
2. 20%
3. 25%
4. 28%
5. 80%

மண்டலக்கொள்ளளவில் அடங்கும் நீரின் கொள்ளளவு 18% ஆன மண்ணில் 50 கிராமில் அடங்கியிருக்க வேண்டிய நீரின் அளவு?

1. 4.5g 2. 9.0g 3. 12.5g 4. 18.0g 5. 36.0g

SALT என்பது?

1. சோதனைக்காக மண் மாதிரிகளைப் பெறுவதற்குரிய ஒரு நுட்பமாகும்
2. மண் சோதனைக்கான ஒரு நுட்பமாகும்
3. பசளை பிரயோகிக்கும் ஒரு முறையாகும்
4. மட்காப்பு நுட்பம் ஒன்றாகும்
5. நீர்ப்பாசன நுட்பம் ஒன்றாகும்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



**மண்படையடுக்கில் 0 ($A_0$) வலயம் (horizon)**

1. A படைக்கு சற்று கீழா இருக்கும்
2. R படைக்கு சற்று மேலா இருக்கும்
3. தாய்ப்பாறையால் ஆக்கப்பட்டது.
4. சில மண்களில் அதிகமேல் படையாக இருக்கும்
5. சில சமயங்களில் E படையடுக்கென அழைக்கப்படும்

**மணல் மண் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க?**

1. நீர்பற்றும் திறன் அதிகமானது
2. தோற்ற அடர்த்தி குறைவானது
3. சிறுமணி அமைப்பு கொண்டது
4. நீர்ப்பாசன இடைவெளி குறைவானது
5. இலங்கையில் அதிகளவு பரந்து காணப்படும்

**உலர்வலயம், ஈரவலயத்தில் காணப்படும் மண்களாகிய செங்கபிலமண், செம்மஞ்சள் பொட்சோலிக் மண் ஆகியவற்றின் (USDA) புதிய பெயர்கள் முறையே**

1. Rhodustalfs , Rhodudults
2. Rhodudults , Rhodustalfs
3. Haplustafs , Rhodustalfs
4. Alluvial , Humudults

**யாழ்ப்பாணத்துக் கிணற்றடி நீரின் கல்சியத்தின் அளவு அதிகமாக இருப்பதற்கு காரணம்?**

1. அடையற்பாறை
2. தீப்பாறை
3. உருமாறிய பாறை
4. மண்ணில் அதிகளவு சேதனப்பொருள் காணப்படுதல்
5. அதிகரித்த வளமாக்கிப் பாவனை

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி. N. வசந்தன், உதவிக் கல்விப் பணிப்பாளர் - தொழில்நுட்பம், (ZEO, - கிளிநொச்சி)

கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் - த,தொ,தொ, (மு/ உடையார்கட்டு மகா வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**மண் நுண்துளைத்தன்மை பிரதானமாக தங்கியிருப்பது?**

1. தோற்ற அடர்த்தியிலும் மண் கட்டமைப்பிலும்
2. பயிரிடப்படும் பயிரின் வகையிலும் போகத்திலும் ஆகும்
3. தாய்ப்பாறை பொருளின் தன்மையிலும் மண் உருவாக்கத்திலும்
4. தன்னீர்ப்பிலும், மண் ஈரலிப்பு உள்ளடக்கத்திலும்
5. சேதனப் பொருட்களின் சேர்க்கையிலும் மண் ஆழத்திலும்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி. N. வசந்தன், உதவிக் கல்விப் பணிப்பாளர் - தொழில்நுட்பம், (ZEO, - கிளிநொச்சி)
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் - த,தொ,தொ, (மு/ உடையார்கட்டு மகா வித்தியாலயம் )
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk